பாளையப் பகுதிகள் (cantonment areas)

திரு. எல். பலராமன் (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்) : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில் உள்ள பாளையப் பகுதிகளும் (cantonment areas) அவற்றின் பரப்பளவும் யாவை ?

(இ) மாநில வரிவிதிப்பிலிருந்து அவற்றிற்கு விலக்களிக்கப்பட்டுள்ளதா ?

(உ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : மேலவைத் தலைவரவர்களே, (அ) மாநிலங்களில் உள்ள கண்டோன்மென்ட் பகுதிகளின் எண்ணிக்கை, மொத்தப் பரப்பளவு ஆகிய விவரங்கள் பற்றிய பொருள் மீது மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இது மாநில அரசின் அனுமதியின் கீழ் வருவதில்லை.

(இ) & (உ) "கண்டோன்மென்ட்" பகுதி மத்திய அரசினரால் கண்டோன்மென்ட் சட்டம், 1924-ன் கீழ் நிர்வகிக்கப்பட்டு வருவதால் கேள்வியில் கேட்கப்பட்டுள்ள பிற விவரங்களுக்கு பதில் அளிக்க இயலவில்லை.

Agitation of the Power-loom Weavers in Somanur

* 258 Q.—Thiru M. SANKARALINGAM : Will the Hon. the Minister for Labour be pleased to state :

(*a*) whether the power-loom weavers are agitating in Somanur, Coimbatore District for the increase of their daily wages ;

(*b*) whether any representation has been received from them ; and

(*c*) if so, the action taken thereon ?

சோமனூரில் விசைத்தறி நெசவாளர்களின் போராட்டம்.

திரு. எம். சங்கரலிங்கம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) விசைத்தறி நெசவாளர் தங்களது தினக்கூலியை உயர்த்த வேண்டுமென்று கோரிக்கை வைத்து, கோயம்புத்தூர் மாவட்டம், சோமனூரில் போராட்டம் நடத்தி வருகிறார்களா ?

[1974 மார்ச் 30

(இ) அவர்களிடமிருந்து முறையீடு ஏதேனும் வந்துள்ளதா?

(உ) ஆமெனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) சோமனூர் பகுதியிலுள்ள விசைத் தறி நெசவாளர்கள் 29—11—1973 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

(இ) கூலி உயர்வு மற்றும் இதர கோரிக்கைகளை தொழிலாளர்கள் எழுப்பினர்.

(உ) வருவாய்த்துறை அமைச்சர், கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர் முன்னிலையில் 11—12—1973-ல் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. திருப்பூர் பகுதியில் தொழில் தகராறுகள் சட்டம் 18(1) பிரிவின் கீழ் 6—10—1973-ல் ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி கூலிகளை அளிக்குமாறு நிர்வாகத்தினர்களுக்கு வருவாய்த்துறை அமைச்சர் ஆலோசனை கூறினார். இக் கருத்துரையை நிர்வாகத்தினர் ஏற்றுக்கொள்ளவில்லை. இதனை அடுத்து, மாவட்ட ஆட்சித் தலைவர் முன்னிலையில் நடந்த பேச்சுகளின் பலனாக தற்காலிக உடன்பாடு ஏற்பட்டு தொழிலாளர்கள் 27—12—1973 முதல் வேலைக்குத் திரும்பினர். கூலியை குறித்து பிறகு விவாதிக்கலாம் என ஒப்புக் கொள்ளப் பட்டது.

திரு. வி. வெங்கா: தலைவரவர்களே, விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருக்கக் கூடிய கூலியாட்களுக்கு குறைந்தபட்சக் கூலி நிர்ணயம் செய்திருக்கிறோம். அதே மாதிரி நெசவுத் தொழிலில் இருப்பவர்களுக்குக் குறைந்தபட்சக் கூலியை அரசு நிர்ணயம் செய்யுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, இந்தக் குறைந்த பட்சக் கூலியை நிர்ணயிக்கக் குழு போடுவது அரசின் ஆலோசனையில் இருக் கிறது. ஆனால் இந்தப் பிரச்சினையைப் பொறுத்த வரையில், இது பவர் லூம் வீவர்ஸ் பிரச்சினை. அதில் கூலித் தகராறு மட்டுமல்லாமல், வேறு பிரச்சினைகளும் இருக்கின்றன.

Membership Fee to the Trade Unions from the Workers

* 259 *Q.*—Pulavur O. Arivudai Nambi (on behalf of THIRU KATTOOR GOPAL) : Will the Hon. the Minister for Labour be pleased to state with reference to the answer to question No. 57 on 22nd November 1973:

(a) whether any representation has been received by the Government requesting amendment of the Payment of Wages